IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 23/2016

Deposition of witness for prosecution : PW 11

Defense :

Name : மெய்யப்பன்

Father's Name : கோதண்டராமன்

Village : முள்ளண்டிரம்

Taluk : ஆரணி

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.06.2023

முதல் விசாரணை

**1 ம் எதிரி இறப்பு, 2 எதிரி முதல் 11ம் எதிரிகள் ஆஜர்.**

1. நான் தற்போது நடுத்தெரு, முள்ளண்டிரம் கிராமம், ஆரணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் சவுண்ட் சர்வீஸ் நடத்தி வருகிறேன். 24.03.2014 ம் தேதி தனசேகர் எனக்கு போன் செய்து தனக்கு அடிப்பட்டுவிட்டதாக தகவல் சொன்னார். நான் தகவல் கிடைத்து பகல் 2.30 மணிக்கு முள்ளண்டிரம் கிராமத்திலிருந்து ஆரணி அரசு மருத்துவமனைக்கு வந்தேன்.

2. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயர் செய்தார்கள். போலிசார் எழுதிய பேப்பரில் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசரில் 2வது சாட்சி கையெழுத்து பழனி என்பவர் செய்தார். பார்வை மகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்பு போலிசார் பகல் 3.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து T.N.49 K 7101 என்ற சிமெண்ட் கலர் டாடாசுமோ வாகனத்தை என் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் முதல் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னுடன் பழனி

என்பவர் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையெழுத்து போட்டார். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள டாடாசுமோ வாகனம் போலிசார் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றிய வாகனம் தான். அந்த ஏழு புகைப்படங்கள் **அ.சா.ஆ.5 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் முள்ளண்டிரம் கிராமத்தை சேர்ந்தவர். எனக்கு போன் மூலமாக தகவல் தெரிவித்த தனசேகரும் முள்ளண்டிரம் கிராமத்தை சேர்ந்தவர்தான். தனசேகர் என் உறவினர் அல்ல.

2. தனசேகருக்கும் 1ம் எதிரி பசுபதியின் மகன் மணிகண்டன் என்பவருக்கும் ஏற்கெனவே முள்ளண்டிரம் கிராமத்தில் தகராறு ஏற்பட்டு அடிப்பட்டு இருவருமே முள்ளண்டிரம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருக்கும்போதே தனசேகர் மருத்துவமனையில் இருந்த கத்தரிகோலை எடுத்து மணிகண்டனை குத்திவிட்டதால் முள்ளண்டிரம் மருத்துவமனையில் தனசேகருக்கும், மணிகண்டனுக்கும் சிகிச்சை அளிக்க முடியாது என்று சொல்லி அவர்கள் ஆரணி அரசு மருத்துமவனையில் சிகிச்சைக்காக வந்தார்கள் என்றால் ஆரணி மருத்துவமனைக்கு வந்தவிவரம் தெரியும். ஆனால் அதற்கு முன்பு அவர்களுக்குள் நடந்த தகராறு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது.

3. தனசேகருக்கும் மணிகண்டனுக்கும் ஏற்பட்ட தகராறுக்கு காரணம் அ.தி.மு.க மற்றும் தி.மு.க. கட்சியினருக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் தான் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தகராறு ஏற்பட்டது என்பதுதெரியும்.

4. எனக்கு தனசேகர் உறவினர் இல்லை என்ற பட்சத்தில் எனக்கு எதற்காக அவர் போன் செய்தார் என்றால் நான் ஏற்கெனவே அ.தி.மு.க சார்பில் கவுன்சிலராக இருந்ததால் எனக்கு போன் செய்தார். நான் 2005ம் ஆண்டு கவுன்சிலராக பதவி ஏற்றேன். தேதி நினைவில்லை. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். அவர்களின் பிறந்த தேதி எனக்கு தெரியாது. நான் சம்பவ தேதி 24.03.2014 என்று சொல்லி இருப்பது போலிசார் சொல்லிக் கொடுத்து தான் சொன்னேன் என்றால் சரியல்ல.

5. நான் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் காவல் நிலையத்தில் தான் கையெழுத்து செய்தேன் என்றால், ஆரணி அரசு மருத்துவமனையில் கையெழுத்து செய்தேன். மேலும் காவல் நிலையத்திலும் கையெழுத்து செய்தேன். வரைபடம் வரைந்து அதில் நான் அரசு மருத்துவமனையில் கையெழுத்து செய்தேன் போலிசார் வாகனத்தை கைப்பற்றிய ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன்.

6. பொதுவாக ஆரணி அரசு மருத்துவமனையில் மருத்துவமனை ஊழியர்கள் பலர் உள்ளார்கள் என்றால் சரி. காவல் நிலையத்தில் எழுதிய ஆவணத்தில் இரும்பு ராடு, பாட்டில், தடி, ஆகியவற்றை என்னிடம் காட்டி கையெழுத்து வாங்கினார்கள்.

7. நான் கையெழுத்து செய்த ஆவணத்தை எழுதியவர் உதவி ஆய்வாளர் ஆவார். அந்த உதவி ஆய்வாளர் பெயர் தரணி. மாதிரி வரைபடத்தை அரசு மருத்துவமனையில் மற்றொரு உதவி ஆய்வாளர் வரைந்தார். அவரது பெயர் தெரியாது.

8. தனசேகருக்கு ஆதரவாக போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அனைத்து ஆவணங்களிலும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றும் என்

முன்னிலையில் டாடாசுமோ வாகனமும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.